1971 ஜூலை 16]

தஞ்சை மாவட்டத்தில் சின்கோனா மரங்கள்

*375 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் சின்கோனா மரங்களை வளர்க்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நிலங்கள் சின்கோனா மரங்கள் வளர்க்க உகந்ததாக இல்லை. ஆகையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் சின்கோனா மரங்களை வளர்க்கும் நோக்கம் இவ்வரசிற்கு இல்லை.

திரு. சோ. கருணாநாதன்: ஏற்கெனவே இருக்கின்ற சின்கோனா தோட்டங்கள் நல்லமுறையில் செயல்படுகின்றனவா? நம் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் சின்கோனா தோட்டங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோவை மாவட்டத்தில் யானைமலைப் பகுதியிலும் நீலகிரி மாவட்டத்திலும் சின்கோனா மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த சின்கோனா மரங்கள் அதிகமாக வால் பாறைப் பகுதியில் வளர்க்கப்படுகின்றன. அங்குள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு மற்ற தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற வேதியங்கள் கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லை என்றால் அப்படிக் கொடுப்பதற்கு என்ன ஏற்பாட்டினை அரசாங்கம் செய்ய உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டுதான் சம்பள உயர்வு கேட்டார்கள். அவர்களுக்கு கணிசமான அளவிற்கு, ஒத்துக்கொள்கிற அளவிற்கு உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த சின்கோனா துறை கழக அரசு வந்ததற்குப் பின்னால் நல்ல லாபத்தில் நடத்தப்பட்டு அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அன்னியச் செலவாணி கிடைக்கிறது. இதை மற்ற மாவட்டங்களில் எங்கெல்லாம் சின்கோனா பயிரிடப்பட முடியுமோ அங்கெல்லாம்—நெல்லை மாவட்டம் போன்று கொஞ்சம் மலைப்பகுதிகளாக உள்ள இடங்களில், மாஞ்சோலை போன்ற பகுதிகளில் இந்தத் தோட்டங்களை வைத்து மேலும் நம் அன்னியச் செலாவணியைப் பெருக்குவதற்கு தமிழக அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டு இருபது லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சின்கோனா மருந்துகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. சின்கோனா செடி வைப்பதற்கு, தரைமட்டத்திலிருந்து 3000 அடி முதல் 8000 அடி உயரத்திலுள்ள இடங்களில்தான் அவை வளரும். ஆகவே தகுந்த இடமாக யானைமலை பகுதியும், நீலகிரி மாவட்டமும் கருதப்படுகிறது. கோடைக்கானலில் பரீட்சார்த்தமாக போட்டு பார்க்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், தஞ்சாவூர் மாவட்டத்திலே சின்கோனா மரம் வளர்க்க முடியவில்லை என்றாலும், அங்கே தேக்கு மரம் பயிரிடப்படுகிறதே அதையாவது விரிவு படுத்த திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சரியான கேள்வி.

திரு. எம். சுரேந்திரன் : சார், நீலகிரி மாவட்டத்தில் சின்கோனு பயிரிடும் பணி செய்கிறவர்களுக்கு வீடுகள், வசதிகள் இல்லை, கூலி சரி வர கொடுப்பது இல்லை என்றும் அரசாங்கத்திற்கு புகார் வந்து இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி மரங்களைப் பற்றியது. இது அனுமதிக்கப்படவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, சுமார் 4000 அடி உயரம் உள்ள ஏலகிரி மலை சின்கோனு பயிரிடுவதற்கு ஏற்ற இடம் என்று டைரக்டர் ஆப் சின்கோனு அவர்கள் பரிந்துரை வழங்கியிருக்கிறார்களா ? அதன் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு என்ன செய்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த மரம் பயிரிடுவதற்கு 3000 முதல் 8000 அடி வரை உயரம் வேண்டுமென்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, மழை சற்று அதிகமாக இருக்க வேண்டும். அந்த அளவில் எந்தெந்த இடங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் இதைப் பயிரிடும் திட்டத்தை பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Denkanikottah hill area is situated on the Mysore Tableland and it is more than 3000 feet in height. So, may I know whether the cinchona plantations will be introduced in those hilly areas?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, திட்டம் எடுப்பதற்கு முன்னாலே பரிசீலனை செய்து இருக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சின்கோனு மரங்களிலிருந்து நீலகிரித் தைலம் என்று உலகப் பிரசித்தி பெற்ற தைலம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது யூகாலிப்டஸ் என்ற மரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது கொயினா மாத்திரை தயார் செய்யப் பயன்படுகிறது.

திரு. சோ. கருணாநாதன் : தலைவரவர்களே, நமது அரசாங்கத்திற்கு சின்கோனு திட்டத்தின் மூலம் அதிக லாபம் வருகிறது. ஆகவே, அந்த திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, விரிவாக விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனமலை, நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்களில் 5000 ஏக்கர் நிலத்தில் இப்போது பயிரிடுகிறோம். அங்கே போதுமான வளமுள்ள நிலம் கிடைக்க வில்லை. நிலம் இல்லாததால் விஸ்தரிக்கும் திட்டம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், சின்கோனு மரத்திலிருந்து ஆராய்ச்சி செய்து ஒரு புதிய மருந்தை நமது ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடித்தார்களே, அது சிறந்த மருந்து என்று கருதப்பட்டதே, அதை இன்னும் விரிவுபடுத்தி நல்ல விதமாக செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ? அதைக் கண்டுபிடித்தவருக்கு ஏதாவது இனாம் அளிப்பதற்கு, பாராட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்து இருக்கிறதா ?

1971 ஜூலை 16]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, விவாதத்திற்குத் தனியான கேள்விபோடவும்.

Shortage of coin in State Transport Buses

* 276 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government are aware of the hardship experienced by the bus crew in Madras City due to coin shortage?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம். இந்திய ரிசர்வ் பாங்கி, போதிய அளவு சில்லரை நாணயங்கள் வெளியிடும் வரை, நிலைமை சீரடையாது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, நமது அரசு பஸ்ஸில் செல்லக் கூடியவர்கள் சில சமயங்களில் அவசரமாகச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் சில்லரை வைத்து இல்லாவிட்டால், அவர்களைக் கீழே இறக்கி விட்டு போகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் சொல்லக்கூடிய காரியம் தாமதமாகிறது. அது மட்டுமல்லாமல் அரசுக்குக் கிடைக்கக்கூடிய அந்த வருமானம் குறைகிறது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இன்னொரு பக்கம் சில்லரை கொடுக்காமலேயே செல்வதற்குப் வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பேருந்து நடத்துனர்களிடத்தில் ரூ. 5 வரை சில்லரை காலையில் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அச்சம் தேவையில்லை.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சில்லரைப் பிரச்னையைப் போக்குவதற்காக டெல்லி டிரான்ஸ்போர்டிலே கூப்பன்கள் அடித்து வினியோகிப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறையை தமிழக அரசு கடைப்பிடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த முறை பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அது சில்லரை விஷயம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த பஸ்ஸிலே பிரயாணம் செய்யக் கூடியவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் போர்டு ஒன்று 'Exact fare saves time என்று போட்டால் சௌகர்யமாக இருக்கும். அவர்கள் இப்படி கரெக்ட்டாக 25 பைசா, 35 பைசா, 20 பைசா என்று கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும் என்று பிரசாரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போதே இந்தப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. கட்டணமும் 10, 15, 20, 25 என்று கொடுப்பதற்கு சௌகர்யமான முறையில் இருக்கிறது. ஆகையால் சில்லரை கொடுப்பதில் இப்போது ஒன்றும் கஷ்டம் இல்லை.